# ஸ்ரீ விளாஞ்சோலைப்பிள்ளை அருளிச்செய்த

# ஸப்தகாதை

## தனியன்

### நேரிசைவெண்பா

வாழிநலந்திகழு நாரணதாதனருள்
வாழி அவனமுத வாய்மொழிகள் வாழியே
ஏறுதிருவுடையானெந்தையுலகாரியன் – சொல்
தேறு திருவுடையாஞ்சீர்

அம்பொனரங்கர்க்கு மாவிக்கும் அந்தரங்க
சம்பந்தங்காட்டித் தடைகாட்டி – உம்பார்
திவமென்னும் வாழ்வுக்குச் சேர்ந்தநெறிகாட்டும்
அவனன்றோ வாசாரிய்ன். 1

அஞ்சுபொருளு மளித்தவன்பாலன்பிலார்
நஞ்சில்மிகக்பொடியார் நாம்சொன்னோம் – நஞ்சுதான்
ஊனைமுடிக்குமதுயிர் முடிக்குமென்று
ஈனமிலார் சொன்னாரிவை. 2

பார்த்தகுருவினவில் பரிவின்றி
சீர்த்தமிகுஞானமெல்லாம் சேர்ந்தாலும் – கார்த்தகால்
மண்ணின்மேல்துன்புற்று மங்குமே தேங்காமல்
நண்ணுமே கீழாநரகு. 3

தன்னையிறையைத் தடையைச்சரணெறியை
மன்னுபெருவாழ்வையொரு மந்திரத்தில் – இன்னருளால்
அஞ்சிலும்கேடோடவளித்தவன்பாலன் பிலார்
நஞ்சிலும்கே டென்றிருப்பன்நான். 4

என்பக்கலோதினா ரின்னாரெனுமியல்வும்
என்பக்கல்நன்மை யெனுமியல்வும் – மன்பக்கல்
சேவிப்பார்க்கன்புடையோர் சன்மநிரூபணமும்
ஆவிக்குநேரே யழுக்கு. 5

அழுக்கென்றிவையறிந்தேனம்பொனரங்கா !
ஒழித்தருளாயுள்ளில் வினையே – பழிப்பிலா
வென்னாரியர்க்காக வெம்பெருமாறார்க்காக
உன்னாரருட்காக வுற்று. 6

தீங்கேதுமில்லாத் தேசிகன்றஞ்சிந்தைக்குப்
பாஙாகநேரே பரிவுடையோர் – ஓங்காரத்
தேரின்மேலேறிச் செழுங்கதிரினூடுபோய்ச்
சேருவரே யந்தாமந்தான். 7

அடிவரவு: – அம்பொன் – அஞ்சு – பார்த்த – தன்னை
என்பக்கல் – அழுக்கு – தீங்கு

விளாஞ்சோலைப்பிள்ளை திருவடிகளே சரணம்
ஸப்தகாதை ஸம்பூர்ணம்